ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# கந்தர்வனின் படைப்புகளில் மகளிர் நிலைப்பாடு

10

**முனைவர். அ.புஷ்பா,**

**உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை,**

**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,கோயம்புத்தூர் - 43**

nivinareen@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

கணவன் நற்பண்பு இல்லாதவனாக எந்நிலையில் இருந்தாலும் ஆணுக்குப் பெண் அடிமையே என வலியுறுத்திய காலகட்டம். மனைவி கணவனை எப்பொழுதும் கடவுளாக நினைத்துப் போற்ற வேண்டும் பெண் தந்தை, கணவன், மகன் என சார்ந்து வாழும் அடிமைகளாக நடத்தப்பட்டனர். ராஜாராம் மோகன்ராய் சதி என்னும் உடன்கட்டை ஏறுதலைஒழிக்கப் பாடுபட்டமை பெண்களுக்கான முன்னெடுப்புகளில் மிகப்பெரிய முயற்சி. ஆன்மீகத்தின் பெயரிலும் தீண்டாமை என்னும் சாதியத்தாலும் நடைபெற்ற மூடத்தனமாகிய பெண் அடிமைத்தனத்திற்கு சுயமரியாதை இயக்கம் பெரிய திருப்பு முனையாக விளங்கியது. அனைத்து துறைகளிலும் பெண்ணின் உரிமையையும் சமத்துவத்தையும் முன்னிறுத்தி கால் பதித்து விட்ட சூழலிலும் 33% இட ஒதுக்கீடு கேட்டு போராடும் நிலையே தற்போதும் நிலவுகின்றது. ஆணுக்குப் பெண் இளைத்தவள் அல்ல. கால ஓட்டத்திற்கு ஏற்ப பெண் தன்னைப் புதுப்பித்துக் கொண்டே இருக்கின்றாள் என்றாலும் இந்த மாற்றம் அனைத்து தரப்பு மக்களிடத்தும் சாத்தியமாக்கப்பட்டுள்ளதா என்றால் அது கேள்விக்குறியே. பெண்ணின் உடல் குறித்த சமூகத்தின் பார்வையும், ஊடகங்கள் உள்ளூடாக பிரதிபலிக்கும் தன்மையும், பாலியல் தொடர்பான வேறுபாடுகளை முன் வைக்க தவறவில்லை என்பதே உண்மை. பெண் கல்வி பணியிடத்தில் பாதுகாப்பின்மை, ஊதிய வேறுபாடு, குடும்ப வன்முறை, பொதுவெளியில் பெண்கள் குறித்தான ஆபாச சித்தரிப்பு என்பன இன்றும் பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகளாக இருந்து கொண்டிருக்கின்றன. இலக்கியங்கள் அறம், கொடை, ஈகை, விருந்தோம்பல் குறித்து பேச தவறவில்லை. அதில் சமூகம் பார்க்க மறந்த உரிமைகள், சட்டங்கள், அடிமை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, பெண் விடுதலை மட்டுமல்ல சமத்துவத்தையும் உரிமை மீறல்களையும் தற்கால இலக்கியங்கள் விரிவாக பேசுகின்றன என்பதை ஆய்வதாக இவ்வாய்வு அமைகின்றது..

**முன்னுரை**

பெண்கள் எவ்வளவோ முன்னேறினாலும் இன்றும் அடிமைப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர் என்பதை கந்தர்வன் படைப்புகளில் காண முடிகின்றது. பெண்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாக வாழ வைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் கந்தர்வன். அவருடைய படைப்புகளில், தாய்,மனைவி,மகள் என்ற நிலைகளில் பெண்களின் நிலை பற்றியும், அவர்களின் பங்கு சமுதாயத்தில் எந்த அளவிற்கு உள்ளது என்பதைப் பற்றியும் காண முடிகின்றது.

**திறவுச்சொற்கள்:** பெண் அடிமை நிலை, பெண்ணிற்கு விலங்கு, சந்தையில் பெண், வழி, சூழ்நிலை.

**பெண் அடிமை நிலை**

பெண்கள் காலம் காலமாக ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். பெண்ணானவள் அடங்கி அடங்கிச் செல்வதால் தான் ஆணின் அதிகாரப் பண்பு உயர்ந்து கொண்டே செல்கிறது. பெண்களுக்குத் தம்மை சமுதாயத்தை எதிர்க்க, தட்டிக்கேட்க துணிவு இல்லை என்பதை கந்தர்வன் சுட்டிக் காட்டுகிறார்.

**"குட்டக் குட்ட குனிந்து கிடந்தாள்**
**குனிந்து குனிந்து கூனிக் கிடந்தாள்**
**கூனிக் கூனிக் குறுகிக் கிடந்தாள்**
**குறுகிக் குறுகிக் குற்றுயிரானாள்"1**

காலம் காலமாய் முன்னேற துணிவின்றி பெண்கள் பெண்களின் வாழ்க்கை கீழான நிலைக்குச் சென்று கொண்டே இருக்கிறது. கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்வது போல் காலம் கடந்து சாதிக்க எண்ணும் போது பல பெண்களின் வாழ்க்கை முடிந்து விடுகிறது.

**"ஒருநாள் ஆகாயம் பார்க்க**
**அவளுக்கு அனுமதி வந்தபோது**
**அவளே ஆகாயம் போயிருந்தாள்"2**

என்னும்போது பெண்கள் துணிவின்றி பிறகு பார்த்துக் கொள்ளலாம் பிறர் பார்த்துக் கொள்வார்கள் என்று எண்ணுவதால் மேலும்

மேலும் அடிமை நிலைக்கே தள்ளப்படுகிறார்கள். அதிகாரத்தை எதிர்த்து குரல் கொடுக்காமல் இருப்பது பெண்கள் செய்யும் முதல் தவறு. இதனால் பெண்களை ஆணாதிக்கச் சமூகம் தனது தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டு ஒதுக்கிவிடுகிறது.

பெண் அடித்தளமாக இருந்து பலரை மேலே எழுப்பி விடுகிறாள் என்பதை

**"உயர்ந்த கட்டிடம் ஒவ்வொன்றிற்கும்**
**செங்கல் அள்ளியது அவளே**
**சிமிண்டைக் கலந்தது அவளே**
**ஆகாயத்தில் பரண் கட்டி**
**அலட்சியமாய் அவள்**
**அள்ளிப்போன கலவையும்**
**செங்கலும்தானே**
**இந்த வானளாவிய மாளிகைகள்**
**வண்ண மிகு கட்டிடங்கள் "3**

என்று கூறுவதன் மூலம் பெண்ணின் உழைப்பை உறிஞ்சிக் கொண்டு இந்த ஆணாதிக்க சமுதாயம் அவளை அடிமைப்படுத்துகின்றது என்று ஆசிரியர் கூறுகின்றார். நம்முடைய நாட்டில் ஆண் பிள்ளை என்றால் வரவு என்று மகிழ்வதும், பெண் பிள்ளை பிறந்தால் செலவு என்று துன்பப்படுவதும் இன்றும் நம் மக்களின் மனதை விட்டு நீங்கவில்லை. இதனை

**"ஆண் பிறந்தால் அட்சய பாத்திரம்**

**பெண் பிறந்தால் பிச்சை பாத்திரம்"4**

என்ற கவிதை வரிகள் சுட்டிக்காட்டுகின்றன. பெண்ணானவள் பிச்சைப் பாத்திரம் என்ற கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டாள். பிறருடைய வேதனைகளைப் பூர்த்தி செய்ய எண்ணும் பெணி தனினுடைய தேவைகளையும் சுய மரியாதைகளையும் விட்டுக் கொடுப்பதெ இதற்குக் காரணமாக அமைகின்றது.

**பெண்ணிற்கு விலங்கு**

பெண்ணுக்கு எவ்வளவு தான் வீட்டில் வசதிகள் இருந்தாலும் அவளுடைய சுதந்திரமும், சுயமரியாதையும் பறிக்கப்பட்டால் அது அடிமை வாழ்வே, தங்கத்தால் ஆன கூண்டுக்குள் அடைபட்டிருக்கும் நிலையே ஆகும். இக்கருத்தினை

**"தங்கத்தில் சுவர் வைத்து**
**வைரத்தில் வாசல் வைத்தாலும்**
**அவள் வைக்கப்பட்ட இடம்**
**சிறையல்லவா"5**

என்று கூறுவதன் மூலம் பெண்ணை வீட்டை விட்டு வெளியே அனுப்பினால் தன்னை போன்றோ, தன்னை விட மேலானவளாகவோ வளர்ந்து விடுவாள் என்று எண்ணிய அவளுடைய வளர்ச்சிக்கு போடும் விலங்கு.

**"தலையில் பூ விலங்கு**
**கையில் பொன் விலங்கு**
**காலில் வெள்ளி விலங்கு**
**சுவாசத் மூக்கில் கல் விலங்கு**
**ஒவ்வொரு மூச்சிலும்**
**அவள் விலங்குகளை நுகர்கிறாள்"6**

பெண்ணுக்கு சாதனை படைப்பதில் ஆர்வம் வந்துவிட்டால் ஆண்களுக்கு போட்டியாக வந்து விடுவார்கள் என்று பெண்ணின் மென்மையை ஆபரணங்கள், பூ மற்றும், உடைகளின் மீது நாட்டம் ஏற்படும் வண்ணம் திசை திருப்பி விட்டு விட்டனர்.

**"மரத்தில் கட்டிய**
**பசு மாடு**
**கயிற்றின் நீளம்**
**சுற்றி வரும்"**
**இதைப்போன்று தான்**
**பெண்ணுக்கு"7**

வரையறை வகுக்கப்பட்டுள்ளது. காய்கறி, பால் வாங்க வாசல் வரை வர உரிமை கொடுக்கப்பட்டது. சினிமா வண்டி வந்தால், சாமி ஊர்வலம் வந்தால் கணவன் வேலைக்குச் சென்று வந்தால் வாசல் வரை வந்து செல்ல அளிக்கப்பட்டுள்ளது. பக்தி, பொழுதுபோக்கு, பதி சேவை இவை எல்லாம் பெண்களைச்சாதனை படைக்க வைத்து விடாது என்பதால் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெண்கள் ஆண் வர்க்கத்தினரால் காலம் காலமாகப் பூட்டி வைக்கப்பட்டுள்ளனர்.

ஆண் வர்க்கம்

பூட்டி வைப்பது ஒருபுறம் இருந்தாலும் பெண் தானே தனக்கு விலங்கிட்டுக் கொள்வதும் காணப்படுகிறது என்ற எதார்த்த நிலையினை கந்தர்வனின் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

**"அம்மா விலங்கிற்கு**
**இப்போது மகனிடம் சாவி"8**

என்ற வரிகளின் மூலம் முதலில் தந்தை, பின் கணவள், அதற்குப் பிறகு மகன் என்று பெண் எப்பொழுதும் ஆணைச் சார்ந்தத வாழும்நிலை பேசப்படுகிறது.

தன் தாய் தன் மகனை வளர்க்கும்போது பல பண்புகளைக் கற்றுக் கொடுக்கிறாள். அப்போது பெண்களுக்கு மதிப்புக் கொடுக்க அவள் கற்றுக் கொடுப்பதில்லை. தன் மகன் யாருக்கும் அஞ்சாமல் வலிமையோடு இருக்க வெண்டும். ஆண் பிள்ளை எந்நேரத்திலும் யாருக்கும் தலை குனியக்கூடாது என்று எண்ணும் தாய், பெண் பிள்ளை அவ்வாறு வலிமையோடு அஞ்சாமல் இருக்க வேண்டும் என்று எண்ணுவதில்லை. தற்போது பெண் குழந்தைகளுக்கும் சொத்தில் உரிமை உள்ளது என்று சட்டம் இயற்றப்பட்டாலும் பல தாய்மார்கள் இதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. பெண் பிள்ளைக்குச் சிறிது நகைகள் மட்டுமே சொந்தம், ஆண் குழந்தைகளுக்குத் தான் அசைகின்ற அசையாத சொத்துக்கள் எல்லாம் சொந்தம் என்று எண்ணுகின்றனர். இவ்வாறு பெண்கள் மீண்டும் மீண்டும் அடிமை சமுதாயத்தையே உருவாக்குகின்றனர் என்பதை அறிய முடிகிறது.

**திருமணச் சந்தையில் பெண்**

சந்தை என்றால் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பொருட்களை குறிக்கும். திருமணச் சந்தையில் பெண்ணும், பொருளும் கொடுக்கப்படுகிறது. பெண்ணை ஆற்றிவுடைய மனிதப்பிறவி என்று எண்ணுவதில்லை. பணத்தைப் போன்ற ஜடப்பொருளாகவே ஆண்கள் கருதுகின்றனர்.

**"கால் பார்க்க நடக்கச் சொல்லி**
**வீசச் சொல்லி மயிர் பார்க்க**
**இழுக்கச் சொல்லி**
**ஒவ்வொரு வீடும்**
**ஒரு பெண் வாங்கும் சந்தை"9**

சந்தையில் ஆடு, மாடுகளை வாங்கும் போது எடை எவ்வளவு இருக்கும். இளமையான ஆடா, உண்பதற்கு ருசியாக இருக்குமா என்று பார்ப்பது போல பெண்களை மனிதப் பிறவி என்று எண்ணாமல் அவளுடைய உணர்வுகளுக்கு முக்கியவத்துவம் கொடுக்காமல் திருமணச் சந்தையில் விற்கின்றனர்.

**"இந்த தேசத்துப் பன்றி**
**கோடீஸ்வரன் மகளை விட**
**விலை உயர்ந்தது"10**

என்று கூறுகிறார் கந்தர்வன்.

திருமணச் சந்தையில் ஆடு மாடுகளை வாங்குவது போல் பெண்ணையும் பேரம் பேசி வாங்கிச்செல்கின்ற நம் சமூகத்தின் கோணல் புத்தியை ஆசிரியர் கிண்டலாகக் கூறிச் செல்கின்றார். திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்பதை விட வரதட்சணைப் பணத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்பது தான் உண்மை.வாங்கிய வரதட்சணையின் வட்டிப் பணத்தில் தான்

வாழ்க்கைப்பட்ட பெண்ணுக்கு உணவும் உடையும் உவந்தளிக்கப்படுகிறது திருமணச் சந்தையிலே பெண் வரதட்சணை என்னும் பொருளோடு விற்கப்படுகிறாள், அவளுடைய அங்கு மதிப்பில்லை, பணத்திற்குத் தான் மதிப்பு கொடுக்கப்படுகிறது. உயிரில்லாப் பணத்திற்கும், ஐந்தறிவுப் பிராணிகளுக்கும் கொடுக்கும் முக்கியத்துவம் பெண்ணுக்கு இந்தச் சமுதாயம் கொடுக்கவில்லை என்று சமூகத்தின் உண்மையான நிலையை எடுத்துக் கூறுகின்றார்.

**சூழ்நிலைகளும் பெண்களும்**

சூழ்நிலையானது மனிதனை மாற்ற வல்லது. அந்தச் சூழ்நிலை ஒருவரை உயர்வான நிலையில் ஏற்றியும் வைக்கும். தாழ்வான நிலைக்குத் தள்ளவும் செய்யும். இதனை 'அதிஷ்டம்' என்று பெயரிட்டு மக்கள் அழைப்பதும் உண்டு. தாய் என்ற நிலையில் தன்னுடைய குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்துப் பெரிய பதவிக்கு அனுப்பி நன்றாக வாழ வைக்க எண்ணுகிறாள். ஆனால் சூழ்நிலை மாற்றத்தால் அவள் தன்னுடைய ஆசைகளையும் உணர்வுகளையும் மறந்துவிட்டு வாழத் தயாராகிறாள். 'திருவேறு' என்ற சிறுகதையில் வீட்டுத் தலைவன் வசதி உள்ளவனாக இருக்கிறான். அதன் விளைவாக வீட்டுத் தலைவி தன் மகனை மிகுந்த செல்வாக்கோடு வளர்க்கிறாள். இந்நிலையில் குடும்பத் தலைவன் இறந்து விடுகிறான். குடும்பம் நிலை குலைகிறது. ஆனாலும் வாழந்தாக வேண்டும் என்பதால் இதற்கு முன் செல்வாக்கோடு வளர்த்த தன்னுடைய மகனை வயலுக்கு வேலை செய்ய அனுப்புகிறாள்.

பெண் என்பவள் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப வாழத் தயாராகிறாள் என்பதை அறிய முடிகிறது. ஒரு நாட்டின் பண்பாட்டுச் சூழலும் பெண்ணை மாற்றவல்லது. வெளிநாடுகளில் கணவன் சரியில்லை என்றால் உடனே விவகாரத்து செய்துவிட்டு அடுத்த கணவனைத் பெண்கள தேடுகிறார்கள். இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் கணவன் என்னதான் அடித்தாலும், சித்திரவதை செய்தாலும் பொறுத்துக் கொண்டு தன் குழந்தைகளுக்காக வாழ்கின்றனர். வெளிநாடுகளில் குழந்தைகளைப் பற்றிக் கவலை கொள்வதில்லை. இக்கருத்தினை 'எங்கெங்கும் அம்மாக்கள்' என்ற சிறுகதையின் மூலம் கந்தர்வன் எடுத்துரைக்கின்றார். குடும்பச்சூழல் பெண்ணின் மனதை மாற்றுவதைப் போல பண்பாட்டுச் சூழலும் பெண்களை மாற்றுகிறது.

**நாகரிகம் ஏற்படுத்தும் சீரழிவு**

` மக்கள் தற்போது தங்களுக்காக வாழ்வதைவிட பிறர் தம்மை உயர்வாக, மதிப்பாக எண்ண வேண்டு என்று பல ஆரம்பரச் செயல்களில் அடுத்தவர்கள் தங்கள் வீட்டிற்கு வருகிறார்கள் என்றால் அதற்காக நல்ல புடவை கட்டுவது,சாவிக் கொத்தை இடுப்பில் சொருகுவது, ஆர்லிக்ஸ் போட்டுக் கொடுப்பது, தன் பிள்ளைகளை அம் வந்தவர் களிட்டு விளையாட வெடுப்பது, தன் பிள்ளைகளை வந்தவர்களுக்கு வரவேற்பு அளிப்பது நாகரிகமாகக் கருதப்படுகிறது. இதுதான் இன்றைய விருந்தோம்பலாக உள்ளது. ஆனால் எதிர்பார்ப்பு இல்லாமல் இந்தச் செயல்கள் இருந்தால் கூட ஏற்றுக் கொள்ளலாம். தன் குழந்தை ஆவலோடு ஆர்லிக்ஸ் கேட்கும் போது

**"அம்மா சொன்னாள் அவர்கள் வீட்டிற்கு நாம் நாளை போகிறோம் நமக்கு ஆர்லிக்ஸ் தர அங்கேயும் ஒரு பீரோ இருக்கும் வருகிறவர் பார்க்க மட்டும் என்று அவளிடம் ஒரு நைலக்ஸ் இருக்கும்"11** என்று கூறுவதன் மூலம் இந்த உபசரிப்புகள் எல்லாம் போலியானவை என்பதை அறிய முடிகிறது.

சிறு குழந்தைகளுக்கு நற்பண்பை, ஒழுக்கத்தை பிறருடன் பழகும் விதத்தை, கொடுத்து வாழும்

வாழ்க்கையைக் கற்றுக் கொடுக்க வேண்டிய பகட்டாய், போலியாய் வாழும் வாழ்க்கையைக் கற்றுக் கொடுக்கின்ற நிலையைப் பல குடும்பங்களில் காண முடிகிறது. நாகரீகமாகக் கருதும் போலி வாழ்க்கை ஒருபுறம் இருக்க, கலாச்சாரம் சீரழிவு இச்சமூகத்தில் மிகுதியாகக் காணப்படுகிறது.

**"உண்டி சுருங்குதல் பெண்டிற்கு மட்டுந்தான் அழகு உங்கள் உணவைக் குறைத்தது பொருளாதார வக்கிரம் உடையைக் குறைத்தது கலாச்சார வக்கிரம்"12** என்று ஆசிரியர் கூறுவதன் மூலம் பெண்களின் அடிமை நிலை வெளிப்படுகிறது. வரதட்சணைக் கொடுமை சுட்டிக் காட்டப்படுகிறது. பெண்களின் அடிமை நிலைக்காக வருந்திய கந்தர்வன் கலாச்சார வக்கிரத்தால் நாகரிகமாகக் கருதிஎன்று பெண்கள் ஆபாசமான நிலையில் உடைகளை அணிவதைக் கண்டிக்கும் விதமாகச் சுட்டிக் காட்டுகிறார்.

வாய்ப்பேச்சில் வீணாகும் காலம்

சில பெண்கள் வீணாகப் பேசிப் பேசியே பொழுதைக் கழிக்கிறார்கள் என்பதை கந்தர்வன் சிறுகதைகள் கவிதைகள் உணர்த்துகின்றன.ஊர் முழுவதும் மழையில் நனைந்து கொண்டிருக்கிறது. ஆண்கள் வயல் வேலைக்குச் சென்று விட்டனர். குழந்தைகள் தண்ணீரில் விளையாட ஆரம்பித்தனர். பெண்கள் எல்லோரும் கண்ணாயிரம் பிள்ளை வீட்டில் கூடிப் பேச ஆரம்பித்தனர். அது வேலைக்குச் சென்றவர்கள் திரும்பி வந்தால் அவர்களுக்குச் சோறு போடக் கூட நேரம் இல்லாமல் பேசிக் கொண்டு இருக்கின்றனர் என்பதை 'மழைபெய்தும்' என்ற சிறுகதையின் வழி சுட்டிக் காட்டுகின்றார்.

**"உலகம்மா புருஷன் திண்ணையடியில் நின்று கத்தினான் ஏய் கஞ்சியை ஊத்திப்புட்டுப் போய்ப் பேசு"13** என்று கூறுவதன் மூலம் பெண்கள் தங்களுடைய நேரத்தைப் பேசிப் பேசியே வீணடிக்கின்றனர் என்ற கந்தர்வனின் எண்ணம் புலனாகின்றது. இக்கருத்திற்கு வலுவூட்டும் விதமாக,

**"ஊர்ப் பெண்கள்
எல்லோருக்கும் ஒருத்தி
பகை வேண்டும்
தலையில் ஒரு குடமும்
இடுப்பில் மறு குடமும்
பாரமும் தூரமும்
இந்தப் பகையில்
மறந்து விடும்"14**

என்ற கவிதை வரிகளும் அமைந்துள்ளன. பெண்கள் தங்களின் சுமையும் பாரமும் தெரியாமலிருக்க வேண்டும் என்பதற்காகக் கூடப் பிற பெண்களைப் பற்றிப் புறனரி பேசுகின்றனர். நாட்டு நடப்புக்களைப் பற்றி, பெண் முன்னேற்றம் பற்றி, பயனள்ள செய்திகளைப் பேச முன்வருவதில்லை என்ற கருத்தை கந்தர்வனுடைய கவிதைகளின் மூலம் அறியமுடிகிறது.

**குறுகிய மனப்பான்மை கொண்ட பெண்கள்**

பெண்களில் சிலர் நாடு நன்றாக இருக்க வேண்டும், உலக மக்கள் நன்றாக வாழ வேண்டும் என்ற பரந்த மனப்பான்மை கொண்டவர்கள் அல்ல. அவர்கள் சுயநலவாதிகளாகக் குறுகிய வட்டத்திற்குள் சுழல்பவர்களாகவே காணப்படுகின்றனர்.

**"வாசற்படிகள் மூன்றென்றால் மேற்படியில் உட்கார்ந்திருப்பவள் தான் அந்த வீட்டுக்காரி. அந்த வீட்டுப் பெண்களே மூன்று படிகளிலும் என்றால் சாவிக் கொத்துக்காரி மேற்படியில், நாடு பூராவும் இந்த நடைமுறை தப்பாமலிருக்கும். இன்னொருத்தியை எங்கே வைக்க வேண்டும் என்பதில் எப்போதும் கவனம் விட்டுக் கொடுக்கக் கூடாது. விட்டால் வினைகள் வரும்"15** என்று கூறுவதன் மூலம் நாட்டின் இன்றைய நிலையும் இதுவே. வீட்டிலும் பெண்களின் மனமானது பிற முன்னேறுவதைப் பொறுத்துக் கொள்வதில்லை. பிறர் முன்னேறுவதைத் தடுக்கத் தம்மால் ஆன முயற்சியைச் செய்கின்றனர். பெரிய பொறுப்புகளில் இருப்பவர்கள் இதை விடவும் கீழான செயல்களைச் செய்ய தயங்குவதில்லை. இதற்குக் காரணம் தன்னைப் போலப் பிறரையும் எண்ணும் பரந்த மனப்பான்மை பெண்களிடம் இல்லாமையே ஆகும்.

**பெண்கள் வெற்றிப் பெறுவதற்குரிய வழி**

பெண்கள் ஆண்களுக்கு நிகராக வாழ வேண்டும் என்று கந்தர்வன் விரும்புகிறார். எனவே தான் பெண்களை விழிப்படையச் செய்யும் விதமாகத் தம்முடைய படைப்புகளைத் தந்துள்ளார். புரட்சியின் மூலமாகத் தான் பெண்கள் விடுதலை பெற முடியும். விழிப்புணர்வு அடைய முடியும் என்றால் அந்தப் புரட்சி தவறாகாது. அது புனிதமான ஒரு செயல் என்று புரட்சியை வரவேற்கிறார்.

**"புரட்சி என்பது**
**பிள்ளை பிடிப்பது போல**
**கொடுமையல்ல**
**பிள்ளை பெறுவது போல**
**புனிதமானது"**

என்ற கவிதை வரிகள் மூலம் பெண்கள் முன்னேற்றத்தில் கந்தர்வன் கொண்டுள்ள ஈடுபாட்டினை அறிய முடிகிறது.

**"பெண்களே**
**இதிகாசம் காவியம்**
**அனைத்தும்**
**உங்கள் அழகையே**
**பேசும் இனிதான்**
**நீங்கள் உங்கள்**
**ஆற்றலைப் பேச வேண்டும்"** 16

என்ற கவிதை வரிகளில் இதுவரை அழகைப் பேசிய காலங்கள் போதும் பெண்களே நீங்கள் ஆற்றலை வெளிப்படுத்தத் தயாராகுங்கள் என்று ஊக்கமளிக்கிறார்.

**"உங்கள் கண்கள்**
**காந்தக் கண்கள் மட்டுமல்ல**
**கோடி வருட நெருப்பைக்**
**குவித்து வைத்த குடங்கள்**

**ஒரு யுகத்து ரகசியத்தை**
**ஒளித்து வைத்த**
**மாளிகைகள் "17**

என்ற கவிதை வரிகள் தங்களிடம் இருக்கும் ஆற்றலை அறியாமல் பெண்கள் நேரத்தை வீணாக்குகின்றனர். அதனை வெளிப்படுத்துவதற்கு தயாராகுங்கள் என்று பெண்களைத் தயாராக்குகிறார்.

**"அழுவதை நிறுத்துங்கள்**
**யாரையும்**
**தொழுவதை நிறுத்துங்கள்**
**இடைப்பட்ட**
**சுறுசுறுப்பு**
**குழந்தைக சிறுவர்க**
**நிலைகளு உறவினர்கள்**
**படைப்புகள் குரல்களை**
**உயர்த்துங்கள்**
**தெருக்களை நிரப்புங்கள்"** 18

என்று கந்தர்வன் தமது கவிதைகள் மூலம் பெண்களிடத்தே ஏற்படுத்தி தங்களுடைய உரிமைகளுக்காக பெண்கள் குரல் கொடுக்க வேண்டும் - புரட்சி இன்றி வழி பிறக்காது என்று பெண்கள் உயர்வடைய, விடுதலை பெற வழி கூறுகின்றார்.

**முடிவுரை**

ஆண்களை விடுத்து பெண்களின் முன்னேற்றம் என்பது சாத்தியமில்லாதது. இருவரும் சரி நிகராக வாழும் தன்மையை நோக்கித்தான் நகர வேண்டிய கட்டாயம் உள்ளது. அதற்கு அடுப்படி முதல் அரசியல் வரை பெண்ணை முன்னெடுக்கும் முயற்சிகளில் ஆணின் பார்வையே சட்டங்களாக இருக்கும் தருவாயில் பெண்ணின் உணர்ச்சிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். பெண்ணின் ஆசை, வெறுப்பு, கனவு, எதிர்காலம் இதனை நோக்கி பய ணப்படுகையில் மானம், மரியாதை இவைகளில் சிறு உரசல்கள் உருவாகினாலும் அனைத்தும் தகர்த்தெறியப்பட்டு விடுகின்றது. சாதித் தூய்மையையும் ஆணவத்தையும் காக்கும் பொருட்டு தெய்வங்களாக புனிதப்படுத்தப்பட்டனர் பெண்கள். உற்றவர்களின் ஆதரவு கிடைக்காத போது தோள் கொடுத்து உதவ வரும் தோழர்களாலையே இன்னல்களை சந்திக்கும் நிலையும் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. பெண் மீதான வன்முறைகள் டி.ஐ.ஜி முதல் பணிப்பெண்கள் வரை அன்றாடம் அதிர வைப்பவையாகவே உள்ளன. இந்தபோக்கில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே சுதந்திரமாக பெண் சுவாசிக்க முடியும்.

**சான்றெண் விளக்கம்**

1. கந்தர்வன், கந்தர்வன் கவிதைகள் (கிழிசல்கள்). ப.75

2. கந்தர்வன், கொம்பன், ப.13.

3. ஜான் முருகு செல்வம், இளம் குற்றவாளிகள், ப.49.

4. பாரதியார், பாரதியார் கவிதைகள், u.204.

5. கந்தர்வன், சுந்தர்வன் கவிதைகள் (சிறைகள்) 1.232

6. கந்தர்வன், கந்தர்வன் கவிதைகள் (கிழிசல்கள்), ப.73

7.கந்தர்வன், கொம்பன். ப.82.

8. இரா. காஞ்சனா, இலக்கியமும் உளவியலும், ப.17.

9. கந்தர்வன், சாசனம்,  ப.55.

10. இரா. காஞ்சனா, இலக்கியமும் உளவியலும்,ப.15.1

11. குழந்தைப் பருவப் பிரச்சனைகளும் தீர்வுகளும் (தமிழ் வெளியீட்டுக் கழகம்) ப.125.

12.கந்தர்வன், கந்தர்வன் கவிதைகள் (கிழிசல்கள்)ப.17

13. கந்தர்வன், கந்தர்வன் கவிதைகள் (சிறைகள்) ப. 30

I4. கந்தர்வன், சாசனம் ப.10

15. கந்தர்வன், கந்தர்வன் கவிதைகள் (கிழிசல்கள்)ப.19

16. கந்தர்வன், கந்தர்வன் கவிதைகள் (சிறைகள்)ப.208

17.கந்தர்வன் கந்தர்வன் கவிதைகள் (மீசைகள்)ப.199

18. கந்தர்வன் கந்தர்வன் கவிதைகள் (சிறைகள்)ப.230

**துணைநூற்பட்டியல்**

1.அடைக்கலசாமி. எம்.ஆர். இலக்கிய வரலாறு,ராசி பதிப்பகம்,90,
கணேஷ் நகர், சேலையூர் அஞ்சல், சென்னை 600 073.

2.கந்தர்வன், சாசனம், அன்னம் புத்தக மையம் 9. சௌராஷ்டிரா சந்து,
மேலமாசி வீதி, மதுரை-1. முதற்பதிப்பு டிசம்பர்- 1991.

3.கந்தர்வன், கந்தர்வன் கவிதைகள், சந்தியா பதிப்பகம், 57 A (4.67 60 77)
53 வது தெரு, அசோக் நகர், சென்னை 600 083.

4.சுப்பிரமணியபாரதி. சி.பாரதியார் கவிதைகள்,108- உஸ்மான் ரோடு,
தியாகராய நகர், சென்னை-600017.

5.பரிமணம்.அ.மா. பாலசுப்ரமணியன்கு.வெ.(ப.ஆ)பத்துப்பாட்டு - 1,நியூ
செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41.பி.சிட்கோ இண்டஸ் டிரியல் எஜடேட்,
அம்பத்துார். சென்னை- 600098.

6.ஜான்முருகுசெல்வம், இளம்குற்றவாளிகள், மெய்யப்பன் தமிழாய்வகம், 53 -புது தெரு, சிதம்பரம்-608001.